N09/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

88092433

International Baccalaureate
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL B – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1**

Tuesday 3 November 2009 (morning)
Mardi 3 novembre 2009 (matin)
Martes 3 de noviembre de 2009 (mañana)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for Paper 1.
- Answer the questions in the Question and Answer Booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas ce livret avant d'y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l'Épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la Prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.

8809-2433

© International Baccalaureate Organization 2009

பனுவல் A

# சேரிகள் நிறைந்த சிங்காரச் சென்னை



❶ தென்னிந்தியாவில் தோன்றிய முதல் நகரம் சென்னை. மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறிய மீனவர் கிராமமாக இருந்த இடம்தான் இன்று சென்னை என்னும் மாநகரமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுக்காலமாகத் தானியங்களுக்கும், பருத்தித் துணிக்கும் பெயர் பெற்றிருந்த இந்தக் கடலோரப் பகுதி 16-ஆம் நூற்றாண்டு முதல் போர்த்துக்கீசியர்களையும், டச்சுக்காரர்களையும், பிரெஞ்சுக்காரர்களையும், பிரிட்டிஷ்காரர்களையும் கவர்ந்து இழுத்தது. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் தங்கள் காலனீத்துவ ஆதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சியைச் சென்னையில்தான் முதலில் தொடங்கினார்கள்.

❷ அன்றிலிருந்து இன்றுவரை கிராமங்களிலிருந்தும் தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிழைப்புத்தேடி மக்கள் சென்னையை நாடி வந்துகொண்டே இருக்கிறார்கள். 'சென்னைப் பட்டணம்' என்று அழைக்கப்பட்ட இந்த நகரத்தின் வளர்ச்சி அசுரத்தனமானது. ஆனால், இந்தத் திட்டமிடாத வளர்ச்சி ஏழைகளின் வாழ்வை வளப்படுத்தவில்லை; மாறாக இவர்களின் வாழ்வை நாசமாக்குகிறது. இந்த ஏழைகள் வாழ்வதோ தெருவோரச் சேரிகளில்தான். இவர்களின் வாழ்க்கையே நடைபாதைகளில்தான் இயங்குகிறது.

❸ 2001-இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி சென்னையில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சேரிகள் உள்ளன. இந்த நகரில் சுமார் பதினெட்டு லட்சம் மக்கள் கழிப்பிடம், குளிப்பறை, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகளற்ற சூழலில் வாழ்கிறார்கள். 1981-இல் 22 சதவீதமாக இருந்த சேரிகளின் மக்கள் தொகை 1996-க்குள் 40 சதவீதமாக ஆகிவிட்டது.



❹ சேரிகள் என்பது சென்னையில் உள்ள பிரச்சினை மட்டுமல்ல. உலகிலுள்ள நகரங்களில் வாழும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு சேரிகளில்தான் வாழ்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை 2003-இல் அறிவித்துள்ளது. ஆனாலும், சேரிகள் அடிக்கடி தீப்பற்றிக் கொள்ளும் அபாயம் சென்னை நகரில்தான் அதிகம். 1988-இல் மட்டும் 27 சேரிகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. இதனைத் தொடர்ந்து அதற்கு அடுத்த ஆண்டிலோ, 42 சேரிகள் தீப்பிடித்திருக்கின்றன. இதன் பின்னணியில் பல காரணங்கள் இருக்கின்றன. பாதுகாப்பற்ற வாழ்க்கைமுறை, நெரிசல்மிக்க குடியிருப்பு, எளிதில் தீப்பற்றும் பொருள்களைக் குவித்து வைத்தல் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம். அரசாங்கத்திடமிருந்து உதவித்தொகை பெறும் நோக்கில் வேண்டுமென்றே தீச்சம்பவங்களை நிகழ்த்தும் முயற்சிகளும் இதில் அடங்கும்.



❺ சேரி வாழ் மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழப் பழகியவர்கள். எப்படிப்பட்ட சூழல்களிலும் போராடி வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்களில் பலர் பிறந்து வளர்ந்தது எல்லாம் இந்தச் சேரியில்தான். குற்றச்செயல்களும், குடி முதலான ஒழுக்கமற்ற செயல்களும் இவர்களின் வாழ்க்கைமுறையாகும். மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் அரசியல்வாதிகள் பலருக்கு இந்தச் சேரி மக்களே கைக்கூலிகள். சென்னை நகரம் எத்தனை மாற்றங்களைக் கண்டாலும், இந்தச் சேரிமக்களின் நிலை மட்டும் மாறாமல் இருப்பது வேதனை தரும் ஒரு செய்தியாகும்.

புதிய பார்வை – ஏப்ரல் 2005 பிரதி, செய்தியாசிரியர் & பதிப்பதிப்பாளர்: திரு எம். நடராஜன், தமிழ் அரசி பதிப்பகம், 189, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 6000018, பக்கங்கள் 47,48 & 49

பனுவல் B

# சிறந்த நிர்வாகி

❶ ஒரு நிறுவனம் சிறந்த முறையில் செயல்படுவது நிர்வாகிகளின் செயல்திறனைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. நல்ல நிர்வாகியிடம் பணிபுரியும் வாய்ப்பைத்தான் எல்லா ஊழியர்களும் எதிர்பார்ப்பார்கள். உழைப்பைவிட உணர்வுகளைப் புரிந்துகொள்பவர்களே நல்ல நிர்வாகிகளாகத் தங்களை உருவாக்கிக்கொள்ள முடியும்.

❷ ஒருவருடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவருடைய உள்ளக்குறிப்பை அறியும் ஆற்றலை எல்லாரும் பெற்றிருக்க மாட்டார்கள். ஆனால், ஒரு நிர்வாகிக்கு இது மிகவும் தேவையானதாகும். முக்குறிப்பைக்கொண்டு ஊழியர்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் நிர்வாகியைப் பெற்றவர்களுக்கு வேலை ஒரு சுமையாகத் தெரியாது; நிர்வாகத்தின் உயர்வுக்குப் பாடுபடுவதில் அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்காது.

❸ இந்தத் திறனில் வல்லவராக இருக்கும் ஒருவர் தலைசிறந்த நிர்வாகி என்னும் பெயரை எளிதில் பெற்றிட முடியும். நல்ல நிர்வாகியாகத் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள விரும்பும் ஒருவர் மேலும் சில பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். எந்த நேரத்திலும் எதிரில் இல்லாத ஒருவரைப்பற்றிக் குறை கூறிப் பேசவோ வசை பாடவோ கூடாது. ஆனால், பல சமயங்களில் பலரும் இந்தத் தவற்றைச் செய்வதைப் பார்க்கிறோம். ஒரு ஊழியரைப்பற்றிப் பிறர் அவதூறாகப் பேசும் சந்தர்ப்பத்தில், நிர்வாகியும் உடன் சேர்ந்துகொண்டு குறைகூறத் தலைப்பட்டால், அவர் மற்ற ஊழியரிடையே தம் மதிப்பை விரைவில் இழந்துவிடுவார். ஏனெனில், ஊழியர்களைப்பற்றிக் குறைகூறும் தன்மை கொண்டவர் என மற்றவர்கள் இவர்மீது அவநம்பிக்கை கொண்டுவிடுவார்கள். அதனால், ஒரு நிர்வாகி எந்தத் தருணத்திலும், அவ்விடத்தில் இல்லாத ஒருவரைப்பற்றிக் குறைகூறுவது மட்டுமல்லாது, மற்றவர்களையும் குறைகூறவும் அனுமதிக்கக்கூடாது. குறையுள்ள ஊழியரைத் தனிமையில் அழைத்துக் குற்றங்குறைகளைச் சுட்டித் திருத்துவது ஒரு நிர்வாகியின் முக்கியக் கடமையாகும். அந்தச் சமயத்தில் அந்த நிர்வாகி கடுமையாக நடந்துகொண்டாலும் தவறில்லை.

❹ நிர்வாகிகள் சிலர் தங்களுடன் பணியாற்றுபவரோடு இணக்கமாகப் பழகியும், அவர்களுடைய செயல்திறனைப் பலரறியப் பாராட்டியும் சிறந்த முறையில் பணிகளை மேற்கொள்ள ஊக்குவிப்பார்கள். இதன் பயனாக, நிர்வாகத்துக்கும் ஊழியர்களுக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் சுமுகமான உறவும் எப்போதும் நிலவும். ஆனால், வேறு சில இடங்களிலோ, நிர்வாகிகள் சிலர் அடக்குமுறை ஆட்சி நடத்துவதும் உண்டு. ஊழியர்களை அரட்டிப் பயமுறுத்தி வேலை வாங்கும் போக்கைப் பின்பற்றும் இத்தகையவர்கள், பயம் இருந்தால்தான் வேலை ஒழுங்காக நடைபெறும் என்னும் கருத்துக் கொண்டவர்கள். இப்படிப்பட்ட நிர்வாகிகள் ஊழியர்களின் கருத்துக்களுக்கோ உணர்வுகளுக்கோ சிறிதும் மதிப்பளிப்பதில்லை. இத்தகைய சூழலில் பணிபுரியும் ஊழியர்கள் நிறுவனத்தின் நலனில் அக்கறை கொள்வதைவிட வெறுப்பைத்தான் கொண்டிருப்பார்கள். தன்னலமற்ற சேவையை இவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது எங்ஙனம் சாத்தியப்படும்?

❺ ஆகவே, ஊழியர்களோடு அனுசரணையாக இருந்து குழுவாக இணைந்து பணியாற்றும் போக்கை எல்லா நிர்வாகிகளும் கடைப்பிடிப்பது அடிப்படைத் தேவையாகும். இதுவே ஒரு நிர்வாகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லும் பயனளிக்கும் வழிமுறையாகும்.

திருக்குறள் காட்டும் நிர்வாக இயல் - திரு எம். ரவீந்திரன், பத்தி 2, (முதல் பதிப்பு, 2005)
பதிப்பாளர் - வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தீ.நகர், சென்னை - 6000017

பனுவல் C

# பண்பட்ட மனமும் நலவாழ்வும்

❶ நாம் வாழும் காலம் சிக்கலான காலம். மரபுவழிப் பண்பாட்டைப் வலியுறுத்தியும் நல்ல விழுமங்களை உணர்த்தியும் மனத்தைப் பண்படுத்திக்கொண்டு பிள்ளைகள் வளரும் சூழல் முன்பு இருந்தது போல் இன்றில்லை. பிள்ளைகள் தங்களுடைய போக்கில் பலவிதமான வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுத் தாமாகவே வளர்கிறார்கள்.

*[ – X – ]*

❷ இக்காலத்தில் அன்புடைய பெற்றோர்களும் பிள்ளைகளோடு நெருங்கிப் பழகி அவர்களை நல்ல பண்புநலன்களோடு வளர்ப்பதற்கு வாய்ப்புகள் அதிகமில்லை. பெற்றோர்களுக்குக் கடமைகள் மிகுந்துவிட்டன. வீட்டில் அவர்கள் குடும்பத்தோடு செலவிடும் நேரமோ குறைந்துவிட்டது. ஆகவே பெற்ற பிள்ளைகளின் உள்ளத்தோடு இயைந்து வாழ்ந்து அவர்களைப் பண்படுத்த முடியவில்லை.

**[ – 19 – ]**

❸ கல்விக்கூடங்களிலும் ஆசிரியர்கள் மாணவர்களோடு உள்ளம் இயைந்து பழக முடியாத சூழல்தான் நிலவுகிறது. மாணவர்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது; பாடங்களும் கூடி வருகின்றன; மணிக்கணக்குப் பார்த்து வகுப்புகளை இயந்திரம் போல் நடத்தி முடிக்க வேண்டியுள்ளது. ஆகவே மனங்களைப் பண்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்கும் இயலாமல் போகிறது.

**[ – 20 – ]**

❹ அறிவு வளர்க்கும் நூல்கள் ஓரளவிற்கு அந்தப் பயனை விளைவிக்கின்றன. ஆனால் இளமையிலேயே பண்பட்ட சில மனங்களுக்குத்தான் அந்த நூல்களும் பயன்படுகின்றன. நூல்கள் எண்ணிக்கையில் பல்கிப் பெருகிவிட்டன. அவற்றுள் நல்ல நூல்களைப் பிரித்துக் காட்டுவது அரிதான செயலாகும். நூல்களைக் காட்டிலும் வார, மாத இதழ்களுக்கும் கவர்ச்சி காட்டும் ஏடுகளுக்கும் செல்வாக்கு உள்ள காலம் இது. ஆகவே நல்ல நூல்களுக்கும் மனங்களுக்கும் உள்ள தொடர்பு வெகுவாகக் குறைந்துவிட்டது.

**[ – 21 – ]**

❺ நல்ல சான்றோர்களை அணுகிப் பழகிப் பண்படும் வாய்ப்பும் இப்போது அருகிப் போய்விட்டது. மக்கள் தொகை பெருகிய நகரங்களின் நெருக்கடியால் யார் எப்படிப்பட்டவர் என்று உண்மை உணர முடியாத நிலைமையும் உள்ளது. விளம்பர வளர்ச்சியால், கெட்டவர்கள் செல்வாக்குப் பெற்று, உயர முடிகிறது; நல்லவர்கள் செல்வாக்கு இழந்து மூலையில் ஒடுங்கவும் நேர்கிறது; உண்மையாகவே நல்லவர் ஒருவர் பழகுவதற்கு வாய்த்தாலும், அவருடன் நெருங்கிப் பழக இக்கால வாழ்க்கைச் சூழல் இடந்தருவதில்லை. அவர்களுக்கும் கடமைகள் பல; நமக்கும் கடமைகள் பல. அவர்களோடு பழகிப் பண்படுவதற்குத் தேவையான ஓய்வும் அமைதியும் கிடைப்பதில்லை.

**[ – 22 – ]**

❻ திரைப்படம் முதலானவை பணம் என்னும் பேயால் ஆட்டி வைக்கப்படுகின்றன. கோடிக்கணக்கில் முதல் இட்டவர்கள் அறத்தையும் பண்பாட்டையும் பொருட்படுத்தினால், பெரிய அளவில் நட்டம் அடையும் நிலையும் உண்டு. அதனால் சுவைகளையும் கவர்ச்சிகளையும் பெருக்கிப் புலன்களுக்கு விருந்து படைப்பதிலேயே இவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இத்தகைய கலைப்படைப்புகளால் இன்பம் பெருகியுள்ளதே தவிர, பண்படுவதற்கு வாய்ப்பு இல்லை. புலனடக்கம் இல்லாதவர்கள் இவற்றைப் பார்த்து நெறிதவறிப் போகும் ஆபத்தே இவற்றில் நிறைந்திருக்கிறது.

❼ பொதுவாக, இக்காலம் தீமைக்கு வேகம் கூட்டுகிறது; நன்மைக்கு *[ – X – ]* இடுவதில்லை. இயல்பாகவே நல்லதை நாடிப் பெறுவதற்கு **[ – 23 – ]** செய்ய வேண்டியதாக உள்ளது; தீமை தானாகவே தேடி வந்து ஒருவரை **[ – 24 – ]** கொள்கிறது. நல்லொழுக்கச் சிந்தனைகளும் சிறந்த பண்பாட்டு **[ – 25 – ]** இல்லாவிட்டால் எவரும் எளிதில் திசைமாறிப் போய்விடுவார் என்பது உண்மையே. இந்நிலையில், நம் சமுதாயத்தை **[ – 26 – ]** அடிப்படையானது ஒழுக்கக் கல்வி ஆகும். இதனைப் பிள்ளைகள் மனங்கொள்ளும் வகையில் வடித்துத் தந்தால், நாடும் வீடும் சிறந்து விளங்க எத்தடையும் இருக்காது.

நலவாழ்வு, மு. வரதராசன், தாயக வெளியீடு, பாரி நிலையம், 184, பாரிமுனை, சென்னை, 600108, பக்கங்கள் 69 - 72

பனுவல் D

# மரண தண்டனை தேவையா?

❶ கடந்த நூற்றாண்டில் துவங்கிய இந்த விவாதம் இந்த நூற்றாண்டிலும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்னும் முயற்சியில் பல ஜனநாயக நாடுகள் ஒன்றுசேர்ந்து குரல்கொடுத்து வருகின்றன. ஆனால், இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் குற்றவாளிகளுக்கு இன்னும் மரண தண்டனை வழங்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

❷ தண்டனை என்பது மனிதனைச் சீர்திருத்தி நெறிப்படுத்துவதா? அல்லது பழிவாங்குவதா? இதுதான் இந்த விவாதத்தின் பொருளாக உள்ளது. சமுதாயத்தில் நாகரிகம் வளராத காலகட்டத்தில் ஒருவனுடைய பல்லை உடைத்தால் உடைத்தவனுடைய பல்லை உடைப்பதும், கையை வெட்டினால் வெட்டியனுடைய கையை வெட்டுவதும்தான் தீர்வாக இருந்தது. ஆனால், இன்று அப்படி எதுவும் இல்லை. குற்றத்தின் தன்மைக்கேற்பச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனால், கொலைக் குற்றம் புரிந்தவனுக்கு அதிகபட்சமாக மரண தண்டனை என்று சட்டங்கள் கூறுகின்றன. இதுதான் இன்றைக்கு உலகம் தழுவிய விவாதமாக மாறக் காரணமாகியுள்ளது.

❸ பொதுவாக, மூன்று விதமான சூழ்நிலைகளில் கொலைக் குற்றங்கள் நிகழ்கின்றன. கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உணர்ச்சிவசப்பட்டுச் செய்யப்படும் கொலை ஒரு வகை. கொலை செய்ய வேண்டும் என்றே திட்டமிட்டுச் செய்யப்படும் கொலை இன்னொரு வகை. நல்லது கெட்டது என்று ஆராயாமல் கொள்கைக்காகச் செய்யப்படும் கொலை என்பது மற்றொரு வகை.

❹ மரண தண்டனையை எதிர்ப்பதால், கொலைக் குற்றம் செய்தவர்களுக்கு எந்தத் தண்டனையும் அளிக்கக்கூடாது என்றில்லை. குற்றம் செய்தவர்கள் நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆனால், ஒரு கொலைக்கு இன்னொரு கொலை கூடாது என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது. எந்தத் தண்டனையும் ஒரு மனிதனை சீர்திருத்துவதாக அமைய வேண்டுமேயன்றிப் பழி தீர்க்கும் முயற்சியாக இருக்கக்கூடாது.

❺ தவறு செய்தோரைத் திருத்துவதற்கும் அவர் மீண்டும் தவறு செய்யாமல் தடுத்து நிறுத்தப்படுவதற்கும் சிறைத் தண்டனை போதுமானது. மரண தண்டனை என்பது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள உதவும் ஒரு சட்ட வழியிலான பழிவாங்கும் முயற்சியே ஆகும்.

❻ மரண தண்டனை தவறாகாது என்பதற்கு நியாயமான இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. கொலைக் குற்றங்கள் செய்தோர் அதற்கு ஈடான தண்டனையைப் பெற வேண்டும் என்பதும், மற்றவர்களை அத்தகைய கொலைக் குற்றங்களைச் செய்வதிலிருந்து தடுக்க வேண்டும் என்பதுமே அக்காரணங்கள். ஆனால், குற்றவாளிகளில் பெரும்பாலோர் மனத்தளவில் நோய் கொண்டவர்களாக இருக்கிறார்கள். உடல் நோய்க்கு மருந்து கொடுப்பதைப்போல மனநோய்க்கும் மருந்து கொடுத்து நல்வழிப்படுத்த வேண்டும். மரண தண்டனை விதிக்கப்படுவதால் மனந்திருந்தி வாழும் வாய்ப்பு ஒருவருக்கு மறுக்கப்படுகிறது என்பது உண்மையே.

❼ வேறொரு கோணத்திலிருந்தும் இந்தப் பிரச்சினையை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். மரண தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்ட நாடுகளில் கொலைக் குற்றங்கள் பெருமளவில் அதிகரித்துவிட்டன என்றோ, மரண தண்டனை உள்ள நாடுகளில் கொலைக் குற்றங்கள் அதிகம் நிகழவில்லை என்றோ கூறிவிட முடியாது. ஆனால், உலகம் முழுதும் தீவிரவாதம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மரண தண்டனையை நியாயப்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. எனினும், மரண தண்டனைகளால் மட்டும் பயங்கரவாத நடவடிக்கைகளை நம்மால் ஒடுக்கிவிட முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். மரண தண்டனை என்பது ஒருபோதும் தீர்வாகாது என்பதைப் புரிந்துகொண்டால் பல தெளிவான முடிவுகளை நம்மால் எடுக்க முடியும்.

புதிய பார்வை – நவம்பர் 2005 பிரதி, செய்தியாசிரியர் & பதிப்பதிப்பாளர்: திரு எம். நடராஜன், தமிழ் அரசி பதிப்பகம், 189, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 6000018, பக்கங்கள் – 50, 51 & 52